**CC.NO. 381/2024** தேதி: **12.05.2026**

**<u>அசா 1 திருமதி. உஷா க/பெ செல்வம் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் நடந்த தேதி தெரியுமா என்றால் 10.09.2023. நான் புகார் கொடுத்த தேதி 12.09.2023. என்னிடம் யார் செயின் பறித்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இரண்டு நாட்கள் கால தாமததிற்கான காரணத்தை புகாரிலோ, போலீஸ் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். போலீசார் நகைகளை என்னிடம் ஒப்படைத்து விட்டார்கள் என்றால் சரிதான். புகாரில் தேதி அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த பொய்யான புகாரிற்கு பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**CC.NO. 381/2024** தேதி: **12.05.2026**

**<u>அசா 2 திரு. செல்வம் த/பெ பொன்னையா மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

மேற்படி அசா1 எனது மனைவி ஆவார். அசா1 புகார் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். தாலி , தாலிக்குண்டு, தாலி செயின் மொத்தமாக 5 1/2 பவுன் இருக்கும். ஆனால் போலீசார் தாலி செயின் (3 பவுன் ) மீட்டு தந்தார்கள். நான் புகார் கொடுத்திலிருந்து சுமார் 1 1/2 மாதத்தில் எனது நகையை மீட்டு தந்ததார்கள். எதிரி தலைகவசம் அணிந்திருந்ததால் எங்களால் எதிரியை பார்க்கஇயலவில்லை. பின்பு போலீசார் கூறிதான் எதிரி குறித்த விவரத்தை தெரிந்து கொண்டேன். நான் புகார் கொடுத்தன்று மட்டும் தான் என்னை போலீசார் விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. புகார் தாரர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் தான் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம் - கனிமொழி**,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.